அருகில் வைப்பாற்றிற்குக் குறுக்கே அணை கட்டுவதற்காக அரசால் ஒப்பளிக் கப்பட்ட பணிக்கு ரூ. 22.26 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டது. ஆக ரூ. 32 லட்சத்திற்கு மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்காண்டுள்ள விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை.

பாலவநத்தம் கிராமத்துக்கு ஏரி

* 235 வினா.—திரு. க. சுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், பாலவநத்தம் கிராமத்தில் ஊருக்குக் கிழக்கே புதிதாகக் கண்மாய் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், பாலவநத்தம் கிராமத்தருகில் ரூ. 2.65 லட்சம் செலவில் கண்மாய் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

சோலையாறு அணை

* 236 வினா.—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோலையாறு அணையின் உயரம், அகலம், நீளம் எத்தனை அடி ?

(இ) அந்த அணையில் எத்தனை கன அடி தண்ணீர் தேக்க முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். சாதிக் பாட்சா : (அ) சோலையாறு கல்லணையின் உயரம் 345 அடி, அகலம் 268 அடி, நீளம் 1,132 அடி.

சோலையாறு மண்ணணையின் உயரம் 235 அடி, அகலம் 820 அடி, நீளம் 2,950 அடி. இரு அணைகளின் மொத்த நீளம் 4,082 அடி.

(இ) சோலையாறு அணையின் மொத்த கொள்ளளவு 5,540 மில்லியன் கன அடியாகும்.

திரு. இ. ராமசாமி : இந்த அணையில் தேக்கப்பட்டிருக்கிற தண்ணீர் எந்தெந்த மின்நிலையங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது? அப்படி மின்நிலையங்களுக்குப் பயன்படுத்தப்பட்டதுபோக மீதியிருப்பதை பொள்ளாச்சி வட்டமல்லாமல் வேறு எந்தெந்த வட்டங்களுக்கு எவ்வளவு ஏக்கர்களுக்கு பயன்படுத்தப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சோலையாறு பவர் ஹவுஸ் 1 ஆன்ட் 2. எந்தெந்தப் பகுதிகளுக்கு, எவ்வளவு ஏக்கர்களுக்கு என்று முடிவு இன்னும் செய்யப்படவில்லை.

வேளாண்மைத் துறைச் சீரமைப்பு

* 237 வினா.—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய இலாக்கா திருத்தி அமைக்கப்படவிருக்கிறதா ?